**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 8 /2020**
**வழக்கு சாட்சி. அ.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பரமசிவம் | | | |
| **தந்தை பெயர்** | : | சுப்பையா | **தொழில்** | : | |
| **கிராமம்** | : | குருந்திராக்கோட்டை | **சமயம்** | : | |
| **தாலுகா** | : | அறந்தாங்கி | **வயது** | : | 67 /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

06.08.2025

**எதிரி ஆஜரில்லை,**

**எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியான கணேசன் என்பவரை எனக்கு தெரியும். எனது மனைவிக்கும், கணேசன் என்பவரின் மனைவிக்கும் தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 30.03.2019 ஆம் தேதி இரவு 07.30 மணியளவில் நான் தாயமங்களம் மாரியம்மன் கோவிலில் சாமி கும்பிட்டு கொண்டு இருந்தேன். எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் ஒருவர் எனக்கு போன் மூலம் எனது மனைவி வளர்மதியை எதிரி கணேசன் ஏற்கனவே தண்ணீர் பிடிக்கும் முன்விரோதத்தினை வைத்து எனது மனைவி வீட்டில் இருந்தபோது வீடுபுகுந்து எனது மனைவியை உழவாரக்கட்டையை எடுத்து எனது மனைவி தலையிலும், பல்லிலும் அடித்துவிட்டதாகவும் அதில் எனது மனைவிக்கு பல் கீழே விழுந்துவிட்டதாகவும் ஆம்புலன்ஸ் மூலம் எனது மனைவியை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் போன் மூலம் தகவல் சொன்னார் அன்று இரவு பேருந்து இல்லாததால் மறுநாள் காலை 01.04.2019 ஆம் தேதி எனது மனைவியை மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்து இருப்பதாக கேள்விப்பட்டு அங்கு சென்றேன்.

2. நான் மருத்துவமனையில் சென்று எனது மனைவியை பார்த்தபோது உடம்பு முழுவதும் காயமாகவும், வீக்கமாகவும் மற்றும் இரண்டு பற்கள் உடைந்தும் தலைலிலும் காயமாக காணப்பட்டார். தலை மற்றும் முகம் வீக்கமாக காணப்பட்டது எனது மனைவி மருத்துவமனையில் இருந்தபோது அறந்தாங்கி போலிஸ்சார் விசாரித்தனர் பின்னர் நான் வீட்டிற்கு சென்று பார்த்தபோது வீட்டில் இருந்த TV மற்றும் TVS XL100 என்ற இருசக்கர வாகனம் ஆகியன உடைந்தும் காணப்பட்டது வீடு முழுவதும் இரத்தமாக இருந்தது. பின்னர் நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம்

காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1 குறியீடு** செய்யப்படுகிறது. போலிஸ்சார் என்னை விசாரித்தனர் நடந்த விவரம் பற்றி சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நானும் எதிரி கணேசனும் உறவினர் என்றால் சரிதான். எதிரி எனக்கு அண்ணன் மகன் உறவினர் ஆவார். எனது வீடும், எதிரி வீடும் அருகருகே உள்ளது. சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து தான் நான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக நேரத்தில் நான் சிவகங்கை மாவட்டம் தாயமங்களம் மாரியம்மன் கோவிலில் இருந்தேன் என்றால், சரிதான். எனக்கு யார் சம்பவத்தை தகவல் சொன்னது என்றால் பக்கத்து ஊர்காரர்கள் தகவல் சொன்னார்கள். பக்கத்து ஊருக்கும், நான் இருக்கும் ஊருக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் இருக்கும்.

2. எனக்கு போன் செய்து சொன்னது யார் என்று எனக்கு தெரியாது. எனக்கும் எதிரிக்கும் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக 6 மாதகாலமாக பிரச்சணை இருந்து வந்தது. நான் அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால், சரிதான். எனது வீட்டிற்கு அருகில் அய்யப்பன், ஜெயராமன், சிங்காரம் அவர்களின் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால், மதியம் 02.00 மணிக்கு மேல் இருக்கும். அ.சா.ஆ.1 புகாரை எழுதியது யார் என்றால், காவல்நிலையத்தினர் நான் சொல்ல சொல்ல எழுதினர், நான் படித்து பார்க்கவில்லை நான் கையொப்பம் செய்தேன். நான் பொய் சொல்லுகிறேன் என்றும், புகாரை நானே தயார் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது வீட்டில் TVS XL உடைத்துவிட்டதாக எனது புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால், சரியல்ல. நான் மேற்படி வண்டி, டிவி ஆகியவைகளை போலிஸ்சாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால், சரிதான்.

3. பட்டியல் சாட்சிகளான 2,3 பிச்சையம்மாள், சண்முகசுந்தரம், வளர்மதி ஆகியோர் எனது உறவினர்கள் என்றால், சரிதான். சம்பவம் நடந்த போது எத்தனை பேர் சம்பவ இடத்திற்கு வந்தனர் என்று எனக்கு தெரியாது. போலிஸ்சார் என்னை புகார் அளித்த தேதியன்றே விசாரித்தார்கள். எதிரி எனது மனைவிக்கு மகன் உறவுமுறை ஆவர் என்றால், சரிதான். நான் புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் கட்டையை பற்றி மாற்றி மாற்றி கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. போலிஸ்சார் கட்டையை கைபற்றவில்லை என்றும் நானே தயார்செய்து கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லுவது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எனக்கும், எதிரிக்கும் ஏற்கனவே உள்ள பிரச்சணையை மனதில் வைத்து பொய்யாக புகாரினை கொடுத்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

**மறுவிசாரணை**:

இல்லை

**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 8 /2020**
**வழக்கு சாட்சி. அ.சா.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | வளர்மதி | | | |
| **கணவர் பெயர்** | : | பரமசிவம் | **தொழில்** | : | கூலிவேலை |
| **கிராமம்** | : | குருந்திராக்கோட்டை | **சமயம்** | : | |
| **தாலுகா** | : | அறந்தாங்கி | **வயது** | : | 50 /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

06.08.2025

**எதிரி ஆஜரில்லை.**

**எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியான கணேசன் என்பவரை எனக்கு தெரியும். இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 பரமசிவம் எனது கணவர் ஆவார். கடந்த 30.03.2019 ஆம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் நான் என்வீட்டில் இருந்தபோது எதிரி கணேசன் ஏற்கனவே தண்ணீர் பிடிப்பதில் இருந்த பிரச்சனையே மனதில் வைத்துக்கொண்டு எனது கணவர் தாயமங்களம் கோவிலுக்கு சென்றிருந்த நிலையில் நானும், பிச்சையம்மாள் என்பவரும் வீட்டில் இருந்தோம் அப்போது எதிரி கணேசன் பைப்படியில் நின்று கொண்டு என்னை பார்த்து "தேவிடியா முண்ட" என்று அசிங்கமாக பேசினார்.

2. பின்னர் எதிரி என்னிடம் காட்டப்படும் உழவாரக்கட்டையால் என்னை தலையின் வலது மற்றும் இடது பக்கபகுதியிலும், வாயிலும், மூக்கிலும் அடித்தார். என்னை வாயில் அடித்ததில் எனது கீழ் பகுதியில் உள்ள இரண்டு பற்கள் உடைந்துவிட்டன(சாட்சி கீழ் பகுதியில் 2 பற்கள் இல்லாததை அடையாளப்படுத்தி காட்டுகிறார்) வாயிலும், மூக்கிலும் இருந்து இரத்தம் வந்தது. தலையில் அடித்ததில் தையல் போட்டார்கள் மூக்கிற்கும், வாயிற்கும் நடுவில் உள்ள சதை எதிரி அடித்ததில் சதை தெரித்துவிட்டது அந்த இடத்தினை சேர்த்து தையல் போட்டுள்ளார். எதிரி என்னிடம் காண்பித்த கட்டையால் உடம்பு முழுவதும் அடித்ததில் உடம்பு முழுவதும் வீங்கி ரத்தக்கட்டு ஏற்பட்டது பின்னர் நான் மயக்கமடைந்துவிட்டேன். பின்னர் பிச்சையம்மாளும் அங்கு இருந்தவர்களும் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கு எனக்கு மூக்கிலும், வாயிலும் இரத்தம் வந்ததால் மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

3. பின்னர் எனது கணவருக்கு யாரோ தகவல் சொல்லி எனது கணவர் மருத்துவமனைக்கு வந்து என்னை பார்த்தார். பின்னர் வீட்டிற்கு சென்று எனது கணவர் பார்த்த போது வீட்டில் இருந்த டிவி மற்றும் வண்டியை எதிரி உடைத்துவிட்டதாக சொன்னார். பின்னர் எனது கணவர் அறந்தாங்கி காவல்நிலையம் சென்று புகார் அளித்தார். நான் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் 30 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் **கட்டை சா.பொ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலிஸ்சார் என்னை விசாரித்தனர் நடந்த விவரம் பற்றி சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இல்லை

**மறுவிசாரணை**:

இல்லை